**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 08.01.2026** **நேரம் மாலை 6.10 மணி**

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குஜராத்தில் ஓராண்டு கால **சோம்நாத் கௌரவ திருவிழா** இன்று தொடங்குவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் **செயற்கை நுண்ணறிவுத் துறை** சார்ந்த இந்திய **ஸ்டார்ட்-அப்** நிறுவனங்களுடன், வட்டமேசைக் கூட்டம் நடத்தினார்.

பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் **பிரகதி** தொழில் நுட்ப வசதியினால், உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு புதிய உத்வேகம் கிடைத்து இருப்பதாக, **நிதி ஆயோக் உறுப்பினர்** திரு. ராஜீவ் கவுபா கூறியுள்ளார்.

**தேசிய சித்த மருத்துவ தினத்தின்** தொடர் நிகழ்வாக, புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, **இலவச சித்த மருத்துவ முகாம்**, மற்றும், **விழிப்புணர்வுப் பேரணியை**, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

-----------------------------

சோம்நாத்-மோடி 1 (19)

வரலாற்று காலத்தில் மீண்டும் - மீண்டும் மொகலாயர் தாக்குதலுக்கு ஆளான குஜராத் மாநிலம் சோம்நாத் கோவில், முதல் முறை தாக்கப்பட்டதன் ஆயிரமாவது ஆண்டை குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, ஓராண்டு கால **சோம்நாத் கௌரவ திருவிழா**, இன்று தொடங்குவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். கொள்கைகளையும், மரபுகளையும் ஒருபோதும் விட்டுக் கொடுக்காத, இந்தியத் தாயின் எண்ணற்ற குழந்தைகளை நினைத்துப் போற்றும் விழா, இது என்று, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் கூறியுள்ளார். **சோம்நாத் கோவில்** மீண்டும், மீண்டும் தாக்கப்பட்ட போதிலும், மக்கள் அதை மீண்டும், மீண்டும் திருப்பிக் கட்டியதை வைத்துப் பார்த்தாலே, இந்தியாவின் மனஉறுதியை புரிந்து கொள்ளலாம் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

சோமநாதர் கோவிலுக்கு, ஏற்கனவே தாம் மேற்கொண்ட பயணங்கள் பற்றிய வீடியோப் பதிவுகளை, பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு, மக்களும் இதுபோன்ற தங்களின் நினைவுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம், கொண்டாட்டங்களில் இணைய வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். 75 ஆண்டுகளுக்கு முன்னர், சோமநாதர் ஆலயம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, அப்போதைய குடியரசுத் தலைவர் டாக்டர் ரஜேந்திர பிரசாத் முன்னிலையில் திறக்கப் பட்டதையும், சர்தார்

சோம்நாத்-மோடி 2 (10)

பட்டேல், கே.எம் முன்ஷி போன்றவர்கள், மறு கட்டுமானப் பணிகளுக்கான முக்கிய முயற்சிகளை மேற்கொண்டதையும் பிரதமர் நினைவு கூர்ந்துள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் ஞாயிற்றுக் கிழமை, **சோம்நாத் கவுரவ விழாவில்** கலந்து கொள்கிறார். **சங்கநாதம்** மற்றும் 72 மணி நேரத்திற்கான **அகண்ட ஓங்கார ஜபத்துடன்** இன்று தொடங்கி உள்ள இவ்விழாவில், மாபெரும் **சூரிய யாத்திரை**, மூவாயிரம் **ட்ரோன்களின்** அற்புத வான்காட்சி உட்பட, பல்வேறு முக்கிய அம்சங்கள் இடம்பெறுகின்றன. இதை தொடர்ந்து ஒராண்டு காலத்திற்கு, பல்வேறு ஆன்மீக, கலாச்சார, மற்றும், சமூக செயல்பாடுகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

------------------------------

மோடி-ஸ்டார்ட்-அப் 1 (7)

செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்து, இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெற உள்ள சர்வதேச மாநாட்டில் பங்கேற்க, உலக அளவிலான போட்டி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட, 12 இந்திய ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் வட்டமேசைக் கூட்டம் நடத்தினார். **டெக் – மஹிந்த்ரா, பாரத்-ஜென், இன்டெலி-ஹெல்த்** உள்ளிட்ட இந்திய ஏஐ **ஸ்டார்ட்-அப்** நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்….

மோடி-ஸ்டார்ட்-அப் 2 (16)

சமூகத்தில் முக்கிய மாற்றங்களை கொண்டு வருவதில், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் அவசியத்தை, பிரதமர் வட்டமேசை கூட்டத்தின் போது பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார். இத்துறையில் புதுமைப் படைப்புகளை உருவாக்கவும், பெரிய அளவில் அவற்றை அமல்படுத்தவும், அதிக வாய்ப்புகள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

**இந்தியாவில் தயாரிப்போம்-உலகிற்காக தயாரிப்போம்** என்னும் உணர்வை வெளிப்படுத்தும் வகையிலான புதிய **ஏஐ** முன்மாதிரி ஒன்றை,

இந்தியா, உலகிற்கு வழங்க வேண்டும் என, பிரதமர் கூறினார். இந்தியா மீது உலகமே மிகுந்த நம்பிக்கை வைத்து இருப்பதால், இந்தியாவின் **செயற்கை நுண்ணறிவு அணுகுமுறைகள்**, வெளிப்படைத் தன்மையுடன், பாரபட்சங்களுக்கு அப்பாற்பட்டதாக அமைதல் அவசியம் என்றும், குறிப்பாக, **அந்தரங்க தரவுகளின் பாதுகாப்பிற்கு** சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும், அவர் வலியுறுத்தினார். இந்தியாவின் **செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள்**, உள்ளடக்கத் தேவைகளை உள்ளூர் அளவில் நிறைவேற்றத் தக்கதாகவும், பிராந்திய மொழிகளில் பயன்படுத்த ஏற்றதாகவும், அமைய வேண்டும் என, அவர் மேலும் கூறினார்.

------------------------------

*இளைஞர் மாநாடு (19)*

நடப்பாண்டிற்கான **விக்சித் பாரத் இளந் தலைவர்கள் மாநாடு**, புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நாளை தொடங்க உள்ளது. இந்த 4 நாள் மாநாட்டில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து, இளம் தலைவர்கள் கலந்து கொண்டு, முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான தங்களின் ஆலோசனைகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முன்னிலையில எடுத்துக் கூற உள்ளனர். நாட்டின் நிஜமான சவால்களை இளைஞர்கள் ஏற்பதையும், இந்தியாவின் எதிர்காலத்தை ஒருங்கிணைந்து உருவாக்குவதில், முன்னின்று உழைப்பதையும், உறுதிப்படுத்தும் வகையில் இம்மாநாடு அமையும் என்று, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கூறியுள்ளார். உலகிலேயே இளைஞர்கள் அதிகம் உள்ள நாடான இந்தியாவில், கொள்கைகள், மற்றும், நிறுவனங்களால் மட்டுமே, எதிர்காலத்தை வடிவமைக்க முடியாது என்றும், இளைஞர்களின் அபார கற்பனை, துணிச்சல், மற்றும், மன உறுதிப்பாடு மூலமாகவே இதை சாதிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாடு முழுவதிலும், அரசியல் பின்னணி இல்லாத 1 லட்சம் இளைஞர்களை பொது வாழ்விற்கு ஈர்க்க, செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்த அழைப்பின் பேரில், முதலாவது விக்சித் பாரத் இளம் தலைவர்கள் மாநாடு, கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடத்தப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

------------------------------

*பிரகதி-சோலாப்பூர் 1 (11)*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட, **பிரகதி** தொழில் நுட்ப வசதியினால், நாட்டில் உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்திற்கு புதிய உத்வேகம் கிடைத்து இருப்பதாக, நிதி ஆயோக் உறுப்பினர் திரு. ராஜீவ் கவுபா கூறியுள்ளார்.

பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் பிரகதி வசதி மூலம் மறு ஆய்வு செய்வதற்கான சில முக்கிய திட்டங்களை, பிரதமர் திரு. நரேந்திர மோடி தாமே தேர்ந்தெடுப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார். பிரகதி மறு ஆய்வு வசதி மூலம் கண்காணித்து நிறைவேற்றப்பட்ட முக்கியத் திட்டங்களில் ஒன்றான **சோலாப்பூர் சூப்பர் அனல் மின் நிலையத் திட்டம்** குறித்து, இன்று இந்த சிறப்புத் தொகுப்பில் காண்போம்…..

*பிரகதி-சோலாப்பூர்* 2 (12)

நாட்டில் பெருகி வரும் மின்சாரத் தேவையை சமாளித்து, எரிசக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முயற்சிகளின் ஒருபகுதியாக, மஹாராஷ்ட்ர மாநிலத்தில், 2012ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட, சோலாப்பூர் சூப்பர் அனல் மின் நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள், அஸ்திவாரக் கட்டத்தில் இருந்த போதே, பிரதமர் திரு. நரேந்திர மோடி, 2015ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் தேதி பிரகதி வசதி மூலம் இத்திட்டம் குறித்து மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். நில ஆர்ஜிதம், மக்கள் மறுவாழ்வு உட்பட, திட்டம் தொடர்பான பல்வேறு அம்சங்களில் ஏற்பட்டு இருந்த தாமதங்களை பிரதமர் இக்கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வு உதவிகளை விரைந்து வழங்கவும், அனைத்து 2 பிரிவுகள் மூலமான மின்சார உற்பத்தியை, 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் திறக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

*பிரகதி-சோலாப்பூர்* 3 (10)

அனல் மின் நிலையத்தின் கொதிகலன்களுக்கு தேவையான நன்நீர்,தொடர்ச்சியான முறையில், தடையின்றி கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில், உஜ்ஜைனிஅணையில் இருந்து, 115 கிலோ மீட்டர் குழாய்ப் பாதை அமைப்பதில் ஏற்பட்டு இருந்த சிக்கல்களும், பிரகதி வசதி மூலமான ஒருங்கிணைப்பினால் சரிசெய்யப் பட்டதை தொடர்ந்து, திட்டப் பணிகள் துரிதமடைந்து, 2019 மார்ச் மாதத்தில், சோலாப்பூர் சூப்பர் அனல் மின் நிலையம், முழு அளவில் செயல்பட தொடங்கியது. கட்டுமான நிலையிலேயே பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்ப்பதன் மூலம், திட்டப் பணிகளை எப்படியெல்லாம் துரிதப்படுத்தலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகவே இத்திட்டம் அமைந்துள்ளது.

------------------------------

*சித்தர் தினம்* (8)

9ஆவது தேசிய சித்த மருத்துவ தினத்தின் தொடர் நிகழ்வாக, சித்த மருத்துவத்தின் சிறப்புகள் குறித்து, புதுச்சேரியில் இன்று நடைபெற்ற,

விழிப்புணர்வு இருசக்கர வாகனப் பேரணியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, கொடியசைத்து தொடக்கி வைத்தார். பாரதி பூங்காவில் மரக்கன்று ஒன்றையும் அவர் நட்டு வைத்து, ஆயுஷ் இயக்குனரக வளாகத்தில், இலவச சித்த மருத்துவ முகாமை தொடக்கி வைத்தார். பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், ஆயுஷ் துறை இயக்குநர் டாக்டர் இந்திரா உட்பட பலர் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

------------------------------

*புதுச்சேரி துணி (7)*

புதுச்சேரியில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு விலையில்லா துணி வகைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஒரு நபர் சிவப்பு குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஐந்நூறு ரூபாயும், ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்ப நபர்கள் உள்ள அட்டைதாரர்களுக்கு ஆயிரம் ரூபாயும், அவரவர் வங்கி கணக்கில் நேரடி பணப் பரிமாற்றம் மூலமாக வரவு வைக்கப்படும் என மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

------------------------------

*புதுச்சேரி பொங்கல் பரிசு (7)*

புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசு வழங்க பிஜேபி வலியுறுத்தி உள்ளது. மாநில பிஜேபி தலைவர் திரு. ராமலிங்கம் தலைமையில், உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், சபாநாயகர் திரு. ஆர். செல்வம் ஆகியோர், இன்று சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை நேரில் சந்தித்து, இதுகுறித்து மனு கொடுத்தனர். மனுவை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க, முதலமைச்சர் உறுதியளித்தார்.

------------------------------

*வானிலை (16)*

இன்று தென்மேற்கு வங்கக் கடல் மற்றும், நிலநடுக் கோட்டு இந்தியப் பெருங்கடல் பகுதியில் நிலவும், ஆழந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், அடுத்த 36 மணி நேரத்திற்கு, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை மாலை அல்லது இரவு வாக்கில், இலங்கை கரையை கடக்கக் கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை, தஞ்சை, மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கும், நாகை, திருவாரூர் மாவட்டங்கள், மற்றும் காரைக்கால் பகுதியில், மிக கனமழைக்கும்

வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக ஈரோட்டில், 33 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. சமவெளிப் பகுதிகளை பொருத்தவரை, தர்மபுரியில், 16 டிகிரி செல்சியஸ், மற்றும், மலைப் பகுதிகளை பொருத்தவரை, கொடைக்கானலில், 3.4 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

-------------------------------

*யோகா-போதை* (13)

போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து விடுபடும் போது ஏற்படும் வேண்டாத அறிகுறிகளை சமாளிக்க, யோகா பெருமளவில் உதவும் என, பெங்களூரில் உள்ள, **நிம்ஹேன்ஸ்** தேசிய மனநல ஆராய்ச்சிக் கழகத்தின் **போதை மீட்பு மையம்** நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வின் முடிவுகள், புகழ்பெற்ற, JAMA PSYCHIATRY மருத்துவ ஆய்விதழில் வெளியிடப் பட்டுள்ளன. நிம்ஹேன்ஸ் இயக்குநர் டாக்டர் பிரதிமா மூர்த்தி மேற்பார்வையில், அமெரிக்காவின் ஹார்வர்டு மருத்துவ கல்லூரியுடன் இணைந்து, இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டதாக, தலைமை ஆய்வாளர் டாக்டர் ஹேமந்த் பார்கவ் தெரிவித்தார். போதை பழக்கத்தில் இருந்து, விலகப் போராடும் கோடிக் கணக்கிலான மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும், உலக அளவிலான போதை மீட்பு சிகிச்சையில், நிலையான ஒரு பகுதியாக யோகா மேம்படுவதற்கான வாய்ப்பாகவும் இந்த ஆய்வு அமைந்து இருப்பதாக, அவர் கூறினார்.

-------------------------------

*தேர்தல் ஆணையம்* (10)

தேர்தல் ஆணையம் இன்று புதுடெல்லியில், மாநில தலைமைத் தேர்தல் ஆணையர்களின் மாநாடு ஒன்றை நடத்தியது. ஜனநாயகம், மற்றும், தேர்தல் மேலாண்மை குறித்து, தலைநகரில் வரும் 29ஆம் தேதி தொடங்க உள்ள, இந்திய சர்வதேச மாநாட்டின் விவாதப் பட்டியல் குறித்து, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார், மற்றும், இதர தேர்தல் ஆணையர்கள், இன்றைய மாநாட்டில் எடுத்துக் கூறினர். உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து, நூற்றுக்கும் மேற்பட்ட தேர்தல் நிர்வாக அதிகாரிகளும், ஐஐடி-ஐஐஎம் உள்ளிட்டஉயர்க் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த கல்வியாளர்கள், மற்றும், நிபுணர்களும், தேர்தல் மேலாண்மை பற்றிய சர்வதேச மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

-------------------------------

*முர்மு-மாணவர்கள் (7)*

அருணாச்சல பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் குழு ஒன்று, இன்று

புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்தது. தேசிய ஒருங்கிணைப்பு சுற்றுலாவின் ஒருபகுதியாக, இம்மாணவர்கள், குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அழைத்து வரப்பட்டு இருந்தனர். நாட்டின் பாரம்பரிய சிறப்புகளை மாணவர்கள் நேரடியாக அறிந்து கொள்ளும் வகையில், இத்தகைய சுற்றுலாக்களுக்கு ஏற்பாடு செய்யப் படுகிறது.

-------------------------------

*நீதிமன்றம்* S-I-R (13)

பீகார் உட்பட பல்வேறு மாநிலங்களில், **சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை** மேற்கொள்வதான தேர்தல் ஆணையத்தின் முடிவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான இறுதி விசாரணையை, உச்சநீதிமன்றம், வரும் 13ஆம் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளது. இன்றைய தினம் இம்மனுக்கள் விசாரிக்கப் படுவதாக இருந்த நிலையில், தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, விசாரணைகளை இவ்வாறு ஒத்தி வைத்தது. வாக்காளர் பட்டியலில், S-I-R பணிகளை மேற்கொள்ள, அனைத்து விதமான அதிகாரங்களும், தகுதியும் தேர்தல் ஆணையத்திற்கு இருப்பதாக, முன்னதாக கடந்த செவ்வாய்க் கிழமை, ஆணையத்தின் தரப்பில், நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. வெளிநாட்டினர் எவரும், வாக்காளராக பதிவு பெறுவதை தடுப்பதற்கான **அரசியல் சாசனக் கடமையும்** தேர்தல் ஆணையத்திற்கு இருப்பதாக, ஆணையம் சார்பில், நீதிமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது.

-------------------------------

*பாமக* (7)

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான அஇஅதிமுக கூட்டணியில், பாமக இணையும் என, டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியிருப்பதை, பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் நிராகரித்துள்ளார். இதர அரசியல் கட்சிகள் உடனான கூட்டணி குறித்து, முறையான முடிவுகளை கட்சியின் நிறுவனர் மட்டுமே எடுக்க முடியும் என்று, அறிக்கை ஒன்றில் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார். பாமக-வுடன் கூட்டணி அமைத்து இருப்பதாக, எந்த கட்சியும் கூறிக் கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

-------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குஜராத்தில் ஓராண்டு கால சோம்நாத் கௌரவ திருவிழா இன்று தொடங்குவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் **செயற்கை நுண்ணறிவுத் துறை** சார்ந்த இந்திய **ஸ்டார்ட்-அப்** நிறுவனங்களுடன், வட்டமேசைக் கூட்டம் நடத்தினார்.

பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் **பிரகதி** தொழில் நுட்ப வசதியினால், உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு புதிய உத்வேகம் கிடைத்து இருப்பதாக, **நிதி ஆயோக் உறுப்பினர்** திரு. ராஜீவ் கவுபா கூறியுள்ளார்.

**தேசிய சித்த மருத்துவ தினத்தின்** தொடர் நிகழ்வாக, புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, **இலவச சித்த மருத்துவ** முகாம், மற்றும், **விழிப்புணர்வுப் பேரணியை**, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**